பக்கங்கள் 21 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 01 வியாழக்கிழமை 14.03.2024 அதிர்வு 227

## யானை மிதித்து பெண் உயிரிழப்பு

**மன்னாரில் துயரம்**

மன்னார், மடு பொலிஸ் பிரிவில் வாழ்வாதாரத்துக்காகத் தொழில் செய்ய வந்த பெண்மணி, யானை மிதித்து உயிரிழந்துள்ளார். 04▶




**பெரியநீலாவணையை உலுக்கிய சம்பவம்**

# இரு பிள்ளைகளைக் கழுத்தறுத்து படுகொலை செய்த கொடூர தந்தை

**தானும் தற்கொலைக்கு முயற்சி**







**(பாறுக் ஷிஹான்)**

**அம்பாறை மாவட்டம், பெரிய நீலா வணைவில் தந்தை ஒருவர், தனது இரண்டு பிள்ளைகளைக் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளார். அதன் பின்னர் அவரும் தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.**

**இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது என்று பெரிய நீலா வணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்தில் இரண்டு பிள்ளைகளின் சடலங்களும் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டன.

மனவளர்ச்சி குன்றிய ஆண், பெண் பிள்ளைகளைக் கொலை செய்துவிட்டு தற்கொலையில் ஈடுபட்ட தந்தையும் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் முஹம்மது கலீல் முகம்மது நிகாஸ் (வயது 29), முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா( வயது 15) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

அவர்களது தந்தையான முஹம்மது மிர்சா முகமது கலீல் (வயது 63) இரத்தக் காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த பிள்ளைகளின் தாய் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துவிட்டார் என்று மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்கவின் வழி நடத்தலில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வட்டு. இளைஞன் படுகொலை: கடத்தலுக்கு உதவும் கடற்படை

## சி.சி.ரி.வி. காட்சி ஆதாரம் வெளியீடு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை இளைஞனைக் கடத்திக் கொலை செய்வதற்குக் கடற்படையினரும் ஒரு வகையில் காரணம் என கொலை செய்யப்பட்டவரின் மனைவி குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், இளைஞனைக் கடத்துவதற்குக் கடற்படையினர் உதவும் வீடியோ காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, தனது வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த இளைஞனையும், அவரது மனைவியையும் பொன்னாலை பாலப் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து, வன்முறைக் கும்பல் ஒன்று இரண்டு கார்களில் கடத்திச் சென்றிருந்தது. அதன்பின்னர் இளைஞன் மிக மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

கடத்திச் சென்ற இளைஞனின் மனைவியை சித்தன்கேணி பகுதியில் இறக்கி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றிருந்தது.

வன்முறைக் கும்பல் தம்மை வழிமறித்துத் தாக்கி கடத்த முற்பட்ட வேளை, தாம் உதவி கோரி பொன்னாலை கடற்படை முகாமுக்குச் சென்ற வேளை அங்கிருந்த கடற்படையினர் தம்மைத் தாக்கி விரட்டினர் என்றும், தனது கணவரின் படுகொலைக்குக் கடற்படையினரும் காரணம் என்றும் படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் மனைவி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வன்முறைக் கும்பலில் நால்வரைக் கைது செய்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கடற்படை முகாமில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா காணொளிகளைப் புலனாய்வாளர்கள் பெற்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்தக் காணொளியில் இளைஞனும் மனைவியும் தஞ்சம் கோரி கடற்படை முகாமுக்கு ஓடி வருவதும், அங்கு கடற்படையினர் அவர்களைத் தாக்குவதும், வன்முறைக் கும்பல் கடற்படையின் கண் முன்னே முகாம் பகுதியில் வைத்தே கணவன், மனைவியைக் கடத்தி செல்வதும் பதிவாகியுள்ளது.

கடற்படையினர் துப்பாக்கிகளுடன் கடத்தல்காரர்களுக்கு உதவி செய்வது காணொளியில் தெளிவாகப் பதிவாகியுள்ள நிலையில் கடத்தலுக்குக் கடற்படையினர் உதவினார்கள் என்ற மனைவியின் குற்றச்சாட்டுக்கு காணொளி வலுச் சேர்த்துள்ளது.





# யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இன்று காலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள், 9 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.




















# வெடுக்குநாறிமலை பூசகர் உள்ளிட்ட ஐவர் மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதம்!

## சிறை சென்று நேரில் பார்வையிட்ட சட்டத்தரணிகள்

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் மகா சிவராத்திரி வழி பாடுகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் பூசகர் உள்ளிட்ட 5 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் இன்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவர்களை வவுனியா சட்டத்தரணிகள் சிலர் பார்வையிட்டனர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், தமக்கான நீதி வழங்கக் கோரி அவர்களில் 5 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் இன்று வியாழக்கிழமை மூன்றாவது நாளாகவும் நீடித்து வருகின்றது. கைது செய்யப்பட்ட 8 பேரில் ஆலயப் பூசாரியார் த.மதிமுகராசா மற்றும் து.தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன், சு.தவ பாலசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அவர்கள் வழமை போல் உணவை உட்கொள்வதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நேற்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வவுனியாவைச் சேர்ந்த சட்டத்தரணிகளான கொன்சியஸ் மற்றும் திலீப்காந் ஆகியோர் இன்று சிறைச்சாலைக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டனர். இதன்போது அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றமையை அவர்கள் உறுதிப்படுத்தினர்.

# கோர விபத்தில் இளம் யுவதி சாவு!

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இளம் யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்த விபத்து கண்டி, மினிப்பே பிரதேசத்தில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் மேற்படி யுவதி வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியில் எதிரே வந்த ஓட்டோ மோதியுள்ளது.




இந்தக் கோர விபத்தில் யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த இரண்டு பெண்களும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பூஜாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய மேரி கனிஷ்டா என்ற யுவதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**யானை....**

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மரண விசாரணையின் மூலம் தெரியவருவதாவது,

வவுனியாவில் வசித்து வந்த குடும்பம் ஒன்று கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு மன்னார், மடு பொலிஸ் பிரிவிலுள்ள கட்டையடம்பன் பகுதிக்குத் தொழில் நிமித்தம் வந்துள்ளனர்.

இவர்கள் தங்கள் நண்பன் ஒருவரின் காணியில் தோட்டம் செய்து வந்துள்ளனர்.

சம்பவம் அன்று இரவு வீட்டின் வளவுக்குள் சத்தம் கேட்டதும் இவர்கள் எழும்பிப் பார்த்தபோது யானை ஒன்று வளவுக்கள் நின்றதைக் கவனித்துள்ளனர்.

இந்த யானை யன்னல் அறுகே வந்து மோப்பம் பிடிக்க ஆரம்பித்துள்ளது. இவர்கள் ஒரு குழந்தையுடன் இருந்தமையால் வீட்டை விட்டு வெளியேற முற்பட்டுள்ளனர்.

உடனே இவர்கள் அறையிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களின் வீட்டில் இரண்டு பாதைகள் காணப்பட்டுள்ளன. அதில் ஒன்று வெளிச்சம் உள்ள பாதையாகவும், மற்றது இருட்டுள்ள பாதையாகவும் இருந்தது.

இவர்கள் இருட்டுள்ள பாதையால் குடும்பமாக வெளியேறியுள்ளனர்.

அப்போது மரணித்த குடும்பப் பெண்ணான கே.டபிள்யூ. ஆராச்சி வியன்சேலாக்கே கயனி மதுவயந்தி குமாரி (வயது 29) பாதையில் தடுக்குப்பட்டு வீழ்ந்ததும் இருட்டுக்குள் நின்ற யானை அவரின் மேல் மிதித்தே மரணம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி ஏ.ஆர்.நசீர் மேற்கொண்டார்.




# யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவத்துறையைச் சீரழிப்போர்

நாடு மிக மிக மோசமான மருத்துவ - சுகாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து நிற்கின்றது.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுகளினால் ஏற்பட்ட நெருக்குவாரம் ஒரு பக்கம் என்றால், மறுபுறம் இந்தத் துறையைப் பல வகைகளிலும் ஆட்டிப்படைக்கும் துறைசார் மாபியாக்களின் தொல்லை அதைவிட அதிகம்.

மருந்து, மருத்துவப் பொருள்களின் சுவீகரிப்பு மற்றும் கொள்வனவில் ஊழல் என்று தொடங்கி இத்துறையின் ஒவ்வொரு பக்கத்திலும் பிரச்சினை.

போதாக்குறைக்கு துறை சார்ந்த பணியாளர்கள், மருத்துவ நிபுணர்களில் இருந்து தொடங்கி ஆய்வுகூட பணியாளர்கள், தாதியர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் என்று எல்லாத் தரப்பினரும் ஆளுக்கொரு தொழிற்சங்கத்தை வைத்துக்கொண்டு நடத்துகின்ற காட்டுத் தர்பார் போதும் போதும் என்றாகி விட்டது.

விசேட பயிற்சியும், பரீட்சைத் தகுதியும், தொழில் வாண்மையும் மிக்கவர்களே இந்தத் துறையில் பணியாற்றலாம் என்பது பெரும்பாலும் தவிர்க்க முடியாத நியதி. அதை வைத்துக் கொண்டு மருத்துவ துறையின் ஒவ்வொரு பிரிவினரும் நடத்தும் களேபரம் - விதிக்கும் நிபந்தனை - நாட்டின் மருத்துவ, சுகாதாரத் துறையை சின்னாபின்னமாக்கி சிதிலமாக்கி வைத்திருக்கின்றது.

அத்துறை சார்ந்தவர்கள் கேட்கும் நிபந்தனைகளை - விதிக்கும் சம்பளக் கோரிக்கையை - அரசு நிறைவு செய்வதாயின் அரச ஊழியர்களின் முழுச்சம்பளமும் மருத்துவ ஊழியர்கள், பணியாளர்களுக்கே வழங்க வேண்டி நேரும்.

மருத்துவ சேவைகளின் ஒவ்வொரு பிரிவினரும் ஆளுக்கொரு சங்கத்தை வைத்துக் கொண்டு, மருத்துவ சேவையை பணயம் வைத்து, நிபந்தனை விதித்து, தொழிற்சங்கத் தர்பார் நடத்தும் போக்கில் நாட்டின் மருத்துவத் துறையே சீரழிந்து விட்டது என்பது தெளிவு.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடி நாட்டையும் அரசையும் மக்களையும் ஆட்டிப் படைக்கின்றது. அதனால் வேதனங்களையும், சம்பள உயர்வுகளையும் நேரத்துக்குப் பொருத்தமாக வழங்க முடியாத இக்கட்டு அரசுக்கு. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் எத்தனமாக வரிவிதிப்பை அரசு உயர்த்தி உள்ளது. இது எல்லாத் துறையினரையும் பாதிக்கும் விடயம்.

ஆனால் நாட்டுடன் சேர்ந்து, பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து, மீண்டெழுவதற்கு உழைக்க மருத்துவர்கள், நிபுணர்கள், மருத்துவ சேவையினர் யாரும் தயாரில்லை. அதனால் மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு, நாட்டை நட்டாற்றில் விட்டு, அவர்கள் தினசரி வெளிநாடுகளுக்குப் பெரும் எண்ணிகையில் விமானம் ஏறிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களை மறித்து பிடிப்பதற்காக அவர்களுக்கு ஒரு கொடுப்பனவு உயர்வை வழங்கினால், அதைப் பிடித்துக் கொண்டு ஏனைய மருத்துவ சேவைத் துறையினர் தொழிற்சங்க நடவடிக்கை, வேலை நிறுத்தம் என்று குழப்பம் விளைவிக்கின்றனர்.

போதிய மருத்துவர்கள் இல்லை - நாட்டுக்கு அவசரமாக மருத்துவர்கள் தேவை என்பதால் - தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கப் புறப்பட்டால் அதற்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போர்க் கொடி தூக்குகின்றது. புதிதாகப் பெரும் எண்ணிக்கையில் மருத்துவர்கள் வந்துவிட்டால் தங்களின் மவுசு குறைந்த விடும் என்ற உண்மையான காழ்ப்புணர்வை மறைத்து வைத்துக்கொண்டு, அவசரப்பட்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கினால் மருத்துவத்துறையே இலங்கையில் சீரழிவு நிலையை அடைந்துவிடும் என்று பல்லவி வேறு அவர்களிடமிருந்து வருகிறது.

இப்படி இந்தத்துறை சார்ந்த பிரகிருதிகளின் சுயநல நோக்கிலான தொழிலாளர் கூட்டு நடவடிக்கைகள், நிபந்தனை விதிப்புக்கள், போராட்ட முஸ்தீபுகளினால் நாட்டின் முழு மருத்துவத்துறை - சுகாதார நிலைமை - முழுமையாகப் பின்னடைவு காணும் ஆபத்தான கட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

போதிய மருத்துவர்களை சேவையில் ஈடுபடுத்துதல், நாட்டின் வளத்தில் கல்வியும் பயிற்சியும் பெற்றுத் தேறிய மருத்துவர்கள், நாட்டில் குறிப்பிட்ட காலம் தவறாது கடமையாற்றி, பணி செய்வதை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்களில் பொதுமக்கள் இனிப் பார்வையாளர்களாக இல்லாமல் தாமே நேரடியாக பங்காளிகளாகி, முடிவு செய்ய வேண்டிய கட்டம் வந்துவிட்டது.

நாட்டில் போதிய மருத்துவர்கள் - அத்துறை சார்ந்த நிபுணர்கள் இல்லை என்பதால் அதற்கான கல்லூரிகளை அதிகரித்து, வாண்மையாளர்களைப் போதிய அளவு உருவாக்கப் புறப்பட்டால், அதிலும் அத்துறை சார்ந்தோர் நிபந்தனைவிதித்து, குழப்பி, குட்டிசுவராக்கும் திருவிளையாடல் இங்கு தொடர்கின்றது. இதை மக்கள் இனியும் அனுமதிக்க கூடாது.



# தங்கி இருக்கும் நிலைமைக்கு மாற்றீடாக நிலையான வறுமை ஒழிப்பு செயற்றிட்டம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

நாட்டில் வறுமை ஒழிப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அடுத்தவர்களில் தங்கி இருக்கும் நிலைப்பாட்டில் இருந்து விடுபட்டு நிலையான வறுமை ஒழிப்புத் திட்டத்தைத் நடைமுறைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது. இது ஜனசவிய திட்டத்தின் முன்னோக்கிய அடுத்த கட்டமாகும். இதன் மூலம் ஒரு குடும்பத்தை நடத்தும் குடும்பத்தின் நுகர்வு, முதலீடு, சேமிப்பு மற்றும் உற்பத்தி செயல் முறைகளுக்கு வளங்கள் பெற்றுக் கொடுக்கப்படும். ஏழ்மை நிலையை அடைந்தோர், பாதிக்கப்பட்டவர்களுக்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் பஸ் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், 85 ஆவது கட்டமாக 50 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் அநுராதபுரம், கலாவெவ, தலாவ மகா வித்தியாலயத்துக்கு வழங்கப்பட்டது.

நேற்று (13) இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தில் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார மாதிரி இணைக்கப்படும். ஏற்றுமதிச் சந்தையை மையமாகக் கொண்டு வீட்டின் அங்கத்தவர்களான குடும்பங்களின் தாய், தந்தையர் உற்பத்திச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படுவர். இதன் மூலம் டொலரில் பணம் சம்பாதிக்க முடியும்.



பிள்ளைகளிடம் பொறாமைத் தனத்தைக் காட்டாதீர்கள்.பாடசாலை மாணவர்களிடம் எந்த வகையான பொறாமைத் தனத்தையும் காட்டாதீர்கள். பிரபஞ்சம் வேலைத் திட்டம் தொடர்பாகப் போலியான கதைகளை கட்டமைக்காதீர்கள்.

நாம் பகிர்ந்தளித்து வழங்கும் நன்கொடைகள் குறித்து பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன. அரசியலுக்காகவும் தேர்தலுக்காகவுமே இவ்வாறு நன்கொடைகளை வழங்குவதாகக் கூறி வருகின்றனர். இவ்வாறு பகிர்ந்தளிக்கும் எனது பணியை நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்காத 1994 ஆம் ஆண்டு தொட்டே மேற்கொண்டு வருகின்றேன்.

கொழும்பு உயர்தரப் பாடசாலைகள், உயர்தரக் கல்லூரிகள், சர்வதேச பாடசாலைகள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் தரப்பினருக்கு பிரபஞ்சம் வேலைத்திட்டம் பயனளிக்காது. எனவே இவ்வாறான நன்கொடைகள் இத்தகையவர்களுக்கு தேவையற்றனவையாகவே தோன்றும்.

சில பாடசாலைகளில் சரியான போசாக்கான உணவுகள் இல்லாமல் குழந்தைகள் மயங்கி விழும் நிலை உள்ளது. மதிய உணவு வழங்குவதாக கூறும்போது, பகிர்ந்தளிக்கிறேன், சலுகைகளை வழங்குகிறேன் என பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்த வளங்கள் நாட்டில் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே வழங்கப்படுகின்றன.மக்கள் கோரும் முறைமை மாற்றம் ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதிகாரம் இல்லாமல் எதிர்க்கட்சியாக இருந்து நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்விக்கு பங்களித்துள்ளோம். கடந்த 3 ஆண்டுகளில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது அரசியலை விட மனநிறைவோடு செய்யும் பணி.- என்றார்.

# வீதியைக் கடக்க முற்பட்ட பெண்; பஸ் மோதியதில் உயிரிழப்பு!

(ரஸீன் ரஸ்மின்)

வென்னப்புவ நகரில் வீதியைக் கடக்கச் சென்ற பெண்ணொருவர் பயணிகள் பஸ் ஒன்றில் மோதி நேற்று (13) உயிரிழந்துள்ளார் என்று வென்னப்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லுனுவில, ஜயா மாவத்தையைச் சேர்ந்த பெடில்லே பொடி மெனிகே எனும் 69 வயதுடைய பெண்ணொருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பாதசாரிகள் குழுவொன்று வீதியைக் கடக்கும்போது, நீர்கொழும்பு பகுதியில் இருந்து சிலாபம் நோக்கிச் சென்ற பஸ் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது. பின்னர் மீண்டும் முன்னோக்கிச் செல்ல முற்பட்டுள்ளது.

இதன்போது, முன்பக்கமாக வீதியைக் கடக்க முற்பட்ட பெண் மீது பஸ் மோதியுள்ளது. இதனால் அந்தப் பெண் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் வென்னப்புவ போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# செட்டிகுளத்தில் பெண் தலைமை குடும்பத்துக்கு நீர் வழங்கல் திட்டம்

(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் நீண்ட காலப் பிரச்சினையான குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக குடி தண்ணீர் திட்டம் நேற்று (13) கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நேரியகுளம் கிராம அலுவலர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திரு திருமதி சாமுவேல் திரேசம்மா மற்றும் திரு திருமதி தங்கையா பஞ்சாச்சரி மற்றும் த.உதயகுமார் ஆகியோரின் நினைவாக புலம் பெயர்ந்து லண்டனில் வசிக்கும் அற்புதராஜன் விஜயகுமாரி என்பவரின் நிதி உதவியில் ஊடக உறவுகளின் பாலம் அமைப்பின் ஊடாக இந்தத் திட்டம் வழங்கப்பட்டது.

செட்டிகுளம், நேரியகுளம் கிராம அலுவலர் தேவகி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், பூசணிப்பிட்டி அ.த.க பாடசாலை அதிபர் இ.சற்சொரூபன், செட்டிகுளம் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜன், நேரியகுளம் சமுர்த்தி உத்தியோகத்தர், ஊடகவியலாளர்களான ந.கபில்நாத், கி.வசந்தரூபன், திருமதி சி.திவியா, வ.பிரதீபன், சமூக செயற்பாட்டாளர் அற்புதராஜன் விஜயகுமாரி மற்றும் அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# மருத்துவத்துறை பேராசிரியருக்கு தம்பிலுவில் கிராமத்தில் வரவேற்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

தம்பிலுவில் கிராமத்தின் முதலாவது மருத்துவத்துறை பேராசிரியரான கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் குடும்ப நலத்துறை பேராசிரியர் வைத்திய கலாநிதி டாக்டர் கந்தசாமி அருளானந்தத்துக்கு நேற்று பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தம்பிலுவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் அதன் பணிப்பாளர் க. இராஜரத்தினம் கண்ணன் தலைமையில் இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்மையில் குடும்ப நலத் துறை பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற தம்பிலுவிலைச் சேர்ந்த டாக்டர் கந்தசாமி அருளானந்தம் வரவேற்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.





# நாவிதன்வெளியில் மகளிர் தினம்!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவு, சமுர்த்தி பிரிவு, கிராம அபிவிருத்தி பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வு "அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் தலைமையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விசேட அதிதிகளாகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் தி.கிருபைராஜா, கணக்காளர் கே. றிஸ்வி யாஹ்சர், டெப்லின் அமைப்பின் இணைப்பாளர் ரி.இளையராஜா ஆகியோரும், கௌரவ அதிதிகளாக நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ்.சிவம், மேலதிக மாவட்ட பதிவாளர் பு.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் பொன்னாடை அணி வித்துக் கௌரவிக்கப்பட்டனர்.







# பேரீச்சம் பழம், புத்தகங்கள் வழங்கல்

(எம். எப்.நவாஸ்)

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு சவூதி அரசால் இலவசமாக வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களை அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபீர் தலைமையில் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முஸ்லீம் சமய கலாச்சார உத்தியோகத்தர் என். எம்.அஸ்ரப் மற்றும் மாகாண கலாச்சார உத்தியோகத்தர் ஜௌபர் பள்ளிவாசல் தலைவர்கள், மத்ரஸாக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# தனிமையில் மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கியமையால் மரணம்!

(வாஸ் கூஞ்ஞ)

தலைமன்னார் பகுதியில் தனிமையில் ஒரு படகில் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்று சடலமாக மீட்கப்பட்டவர், நீரில் மூழ்கிய காரணத்தாலேயே மரணம் அடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (12) தலைமன்னார் பியர் மீன்பிடி துறையிலிருந்து வெளிக்கள இயந்திரப் படகு ஒன்றின் மூலம் காலை ஏழு மணிக்கு மீனவர் ஒருவர் தனிமையில் வடகடலில் மீன் பிடிக்காகச் சென்றுள்ளார்.

பின் கரைக்கு வந்து பிடிக்கப்பட்ட மீனை கரையில் கொடுத்து விட்டு மீண்டும் பத்து மணிக்கு கடலுக்குச் சென்றுள்ளார். இதன் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் பியர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை மரியச் செல்வம் செங்கோல் பர்ணாந்து (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரின் மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரண விசாரனையில் இவர் ஏற்கனவே இதய வியாதி கொண்டவர் எனவும் மேலும் இவர் சில வியாதிகளுக்கு உள்ளாகி இருந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடலுக்குள் வீழ்ந்த நிலையில், இவர் சென்ற படகு கடலில் நீண்ட நேரமாக ஆளிலில்லாமல் சுற்றிக் கொண்டு இருந்ததை கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட ஏனைய மீனவர்கள் கண்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து கடலில் இருந்த மீனவர்கள் படகு சம்மாட்டிக்கு தெரிவித்ததைத் தொடர்ந்தே கடலில் வீழ்ந்தவரையும் படகையும் மீட்டுள்ளனர்.

பின் கடற்படையினரின் உதவியுடன் இவரை தலைமன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழுந்துள்ளார்.

இவரின் உடற்கூற்று பரிசோதனையில் நீரில் மூழ்கியமையால் எற்பட்ட மரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரின் மரண விசாரைனையை மேற்கொண்ட மரண விசாரனை அதிகாரி ஏ.ஆர்.நசீர் மேற்கொண்டார்.





# மன்னாரில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்டத் தடகள விளையாட்டுப் போட்டிகள்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத் திற னாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் நேற்று (13) மாலை மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரன் கலந்து கொண்டார். மேலதிக அரச அதிபர் , பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது மாற்றாற்றல் கொண் டவர்களின் பல்வேறு போட்டிகள் இடம் பெற்றன. வெற்றி பெற்றவர்கள் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட் டனர்.















# அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் ஆலய திருவிழா நாளை ஆரம்பமாகிறது

அக்கரைப்பற்று பனங்காடு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலய திருவிழா நாளை (15) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆலய பிரதம குருவும் மகோற்சவ குருவுமான வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ புண்ய கிருஷ்ணகுமார சிவாச்சாரியாரால் கொடியேற்றப்படவுள்ளது.

ஆலயத்தில் கொடியேற்றத்தைத் தொடர்ந்து பத்து நாள்கள் சிறப்பாகத் திருவிழாக்கள் இடம்பெறும். இதில் புஸ்பாஞ்சலி திருவிழா (16) , வேத பாராயண திருவிழா (17), தெப்பத் திருவிழா (18), பக்திமுக்தி பாவனை திருவிழா (20), மாம்பழத்திருவிழா (21) ,திருவேட்டைத் திருவிழா (22) 1008 சங்காபிஷேகம் (23), நகர்வலம் (23) இடம் பெற்று எதிர்வரும் 24 ஆம் திகதி தீர்த்தோற்சவம் , தொடர்ந்து பூங்காவனத் திருவிழா(25)வுடன் திருவிழா நிறைவடையும்.



# கால்நடை கூட்டுறவுச் சங்கம் ஆலையடிவேம்பில் திறப்பு!

(பழுவூரான்)

ஆலையடிவேம்பு கால்நடை பாற்பண்ணையாளர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா நேற்று புதன்கிழமை (13) இடம்பெற்றது.

கால்நடை பாற்பண்ணையாளர் விவசாயக் கூட்டுறவுச் சங்கச் தலைவர் சின்னத்தம்பி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சோமசுந்தரம் புஸ்பராஜா, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வினாசித்தம்பி பபாகரன், திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரகுமார் மற்றும் ஆலையடிவேம்பு கால்நடை வைத்திய அதிகாரி ரி.கோகுலதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.







## ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட

# ஊடக மாணவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இம்முறை கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்படுகிறது!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழாவில், ஊடகத்துறையில் ஆண்டுதோறும் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும், யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இந்த ஆண்டு கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப் படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா இன்று (14) தொடக்கம் மூன்று நாள்கள் நடைபெறுகின்றது.

இதன் போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான இரத்தினபுரி மாவட்டத்தில் கொழும்புகாமம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த சேர்ந்த கிருஷ்ணராஜா செல்விக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இலங்கை இராணுவ ஊரடங்கு வேளையில் அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ். இந்துக்கல்லூரியில் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "நிலா நிதியம்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கும் வகையில், தங்கப் பதக்கத்தை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.



இந்நிதியத்தின் அங்குரார்ப்பண சான்றிதழ் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலின் போது யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ் பல்கலைகழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது. இதன்மூலம் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கப் பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவனான புத்தளம் மாவட்டத்தில் கொட்டகை என்னும் கிராமத்தை சேர்ந்த சேர்ந்த செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு வழங்கப்பட்டது. முன்னைய ஆண்டு மொனராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த அமரர் நவரத்னம் தில்காந்திக்கு ஏகாந்த நிலையில் வழகப்பட்டது.

அதற்கு முன்னய ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில் சுதுகங்கை என்னும் கிராமத்தைச் சேர்ந்த மாணவியான முனியப்பன் துலாபரணி, யாழ்ப்பாணம் உடுவிலைச்சேர்ந்த மாணவியான அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமார், யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த தினேஸ் விஜயதர்சினி ஆகியோர் பெற்றிருந்தனர்.

யாழ். பல்கலை பட்டமளிப்பு விழாவில் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தை இந்த ஆண்டு பெற்றுக் கொள்ளும் கிருஷ்ணராஜா செல்வியினது கருத்துப் பகிர்வு வருமாறு,

எனது பெயர் கிருஷ்ணராஜா செல்வி. நான் இரத்தினபுரி மாவட்டத்தில் கொழும்புகாமம் என்னும் கிராமத்தை பிறப்படமாகக் கொண்டுள்ளேன். எனது தந்தை தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் கூலித்தொழிலாளி. நான் எனது ஆரம்பக் கல்வியை இ- நிவி - தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஆறு வரை பயின்றேன். பின் தரம் ஆறு தொடக்கம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம்வரை ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயத்திலும் உயர்தரத்தை இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றேன். உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த பின் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. எனக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பல்கலைக் கழகத்தில் முதலாம் வருடத்தில் ஊடகக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஊடக மாணவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இம்முறை கிருஷ்ணராஜா செல்விக்கு வழங்கப்படுகிறது!

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்கைகள் மற்றும் சமூகவியல் பாடங்களைத் தெரிவு செய்து பயின்று வந்தேன் இரண்டாம் வருடத்தில் இருந்து ஊடகக் கற்கைகள் துறையை சிறப்பு கற்கைகள் துறையாக தெரிவு செய்தேன்.

ஊடகக் கற்கைகள் துறையை சிறப்பு கலையாக தெரிவு செய்யும் போது இதுவரை அறிமுகமே இல்லாத ஒரு துறையைத் தெரிவு செய்கிறோமே என்று சிறு அச்சம் என்னில் ஏற்பட்டது . பின் விரிவுரையாளர்களின் கற்பித்தல் நுட்பங்களும், எமக்கான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளும் எனது அச்சத்தை போக்கி ஆர்வத்தை என்னுள் அதிகரிக்கச் செய்தன.

ஊடகக் கற்கள் துறையில் பாட விதானத்தோடு செயல்முறை ரீதியான கற்கைகளும் இரண்டாம் வருடம் தொடக்கமே ஆரம்பமாகின. கமராவை பயன்படுத்தி புகைப்படம் எடுத்தல் , சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதுதல், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுக்கான பக்க வடிவமைப்பு செய்தல், ஆவணப்படம் தயாரித்தல், பத்திரிகைளுக்குக் கட்டுரைகள் எழுதுதல் போன்றவற்றை அனுபவ ரீதியாகச் செயல்படுத்துவதற்கான தளத்தை ஊடகக் கற்கைகள் துறையால் பெற்றுக் கொண்டேன். அத்தோடு இறுதியாண்டில் தொழில்துறை சார்ந்த பயிற்சியை அரச நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்டதும் அதன் மூலம் ஒரு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமையும் மிகப்பெரிய வாய்ப்பு என்றே கூறலாம்.

விரிவுரைகளுக்கு அப்பால் ஊடகத்துறை சார்ந்தவர்களின், துறைசார் நிபுணர்களின் அனுபவப்பகிர்வுகள் மற்றும் ஊடகப் பயிற்சி கருத்தரங்குகளில் பங்கு பற்றியமை போன்றனவும் எமக்கான மேலதிக அறிவையும் அனுபவத்தையும் பெற்று தந்தது. மும்மொழி புலமை,பால்நிலை அடிப்படையில் நடுநிலையான அறிவு கற்கும் போதே தொழில் அடிப்படையிலான பிரயோக அறிவு என்பன ஊடக கற்கைகள் துறையின் மூலம் எமக்கு கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதங்களாகும் .

தற்போது ஊடகக் கற்கைகள் துறையை சிறப்புக் கலையாகக் கொண்ட எமது சகோதரர்கள் பலர் இன்றும் பல்வேறான ஊடக நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர் . இதே போல் நானும் ஊடகத் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இருக்கின்றது . அந்த ஆர்வத்தின் ஒரு ஆரம்பமாக ஊடக கற்கைகள் துறையால் ஏற்படுத்தி தரப்பட்ட ஒரு வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கை நாடாளுமன்றத்தில் தற்காலிக பணியாளராக சட்டமூல அலுவலகத்தில் தற்சமயம் பணியாற்றி வருகின்றேன். எதிர்காலத்தில் ஊடக ஒழுக்க நெறிகளுடன் கூடிய ஒரு சிறந்த ஊடகவியலாளராக எம் சமூகத்துக்காக எவ்வித பாகுபாடுகளுமின்றி பணியாற்றுவதே என் இலட்சியமாகும்.

அந்த வகையில் எமக்கான வழிகாட்டிகளாக நின்ற ஊடகக் கற்கைகள் துறையின் துறையின் முன்நாள் தலைவரும் கலைப்பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம், ஊடக கற்கைகள் துறையின் தலைவர் திருமதி. பூங்குழலி சிறீ சங்கீரத்தனன், விரிவுரையாளர்களான யூட் தினேஸ் கொடுதோர் மற்றும் திருமதி அனுதர்ஷி கபிலன் ஆகியோருக்கும் எனக்கு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவியாய் இருந்த எனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன்.

அத்தோடு அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்ற தங்கப் பதக்கத்தை எனக்களித்து கௌரவிக்கும் நிலா நிதியம் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்றுள்ளது.





# மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரிக்கு பழைய மாணவி காணி அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரிக்கு பழைய மாணவி றோஹினி சிவபாலன் தனது தாய் யோகேஸ்வரி நமசிவாயம் ஞாபகார்த்தமாக காணி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

லண்டனிலுள்ள கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க பிரதிநிதிகள், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் நினைவுப் படிகக் கல் திரை நீக்கத்தில் கலந்து கொண்டனர்.







# நிந்தவூர் கராத்தே பாடசாலையின் தரப்படுத்தல் மற்றும் விருது வழங்கல்

(எம்.எம்.றம்ஸீன்)

நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் கராத்தே தரப்படுத்தல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு அம்பாறை மாவட்ட எஸ்.கே.எம்.எஸ். கராத்தே பாடசாலையின் கராத்தே பயிற்றுவிப்பாளர் எம்.ரீ. அஹமட் நிம்ஷி தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக கல்முனை இராணுவ பிரிவு தலைமையகத்தின் அதிகாரி மேஜர் ரூவன் மற்றும் எஸ்.கே.எம்.எஸ். பாடசாலையின் தலைவரும் சுஹாரி சோட்டோக்கன் கராத்தே சங்கத்தின் பிரதம போதனாசிரியருமான சிஹான் எம்.எஸ்.வஹாப்தீன் மற்றும் கல்முனை பிராந்தியத்தின் விளையாட்டு ஊக்குவிப்பாளரும் சமூக சேவையாளரும் கல்முனை பெஸ்டர் நிறுவனத்தின் உரிமையாளருமான ஏ.எம்.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம்.அஹமட் ஹுஸைன் மற்றும் கிழக்கு மாகாணத்தின் யு.எஸ்.கே.யு. பிரதிநிதியும் சுஹாரி சோட்டோக்கன் கராத்தே சங்கத்தின் பொதுச் செயலாருமான என்.ஸதாம் மற்றும் சுஹாரி கராத்தே சங்கத்தின் கராத்தே ஒருங்கிணைப் பாளர் ஏ.சி.எம்.பிர்னாஸ் ஆசிரியர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.










# மணல்தீவு றோ.க. வித்திக்கு ‘சிமாட் போட்’ வழங்கி வைப்பு

புத்தளம், மணல்தீவு அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் ஐ.எம்.எச்.ஓ. மற்றும் ரட் ணம் நிதியம் ஆகியவற்றால் வழங் கப்பட்ட ‘சிமாட் போட்’ கற்றல் உபகரணத் தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையில் 120 மாண வர்கள் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு இத்திறன் வகுப்பறை மிகுந்த ஒரு கொடையாகும் என அதிபரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும் குறிப்பிட் டனர்.



# குவைத் நாட்டுத் தூதருடன் சந்திப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

இலங்கையிலுள்ள குவைத் நாட்டுத் தூதுவர் கலாப் எம். எம். புதஹைறரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் சந்தித்துள்ளனர்.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி பணிப்பாளர் சபையின் சார்பிலும், அதிபர் உட்பட விரிவு ரையாளர்கள் சார்பிலுமான பிரதிநிதிகள் குழுவினர் நேற்று (13) கொழும்பிலுள்ள அந்த நாட்டுத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.





# திருமலை செயலக ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு!

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன் சர்வதேச மகளிர் தின மாவட்ட கொண்டாட்டம் நேற்று (13) மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையானது 2024 ஆம் ஆண்டுக்கான கருப்பொருளை "பெண்களில் முதலீடு செய்யுங்கள், முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்" என்று குறிப்பிட்டுள்ளது. அதே போல் இந்த ஆண்டுக்கான பரப்புரைக் கருப்பொருள் "அனைவரையும் உள்ளடக்கும் பணியை ஊக்குவிக்கவும்" என்பதாகும்.

பெண்கள் எவ்வாறு கௌரவிக்கப்பட வேண்டும், அவர்களுடைய ஆற்றல் மற்றும் திறமைகள் என்னவென்ற விடயங்களை இந்த நிகழ்வின் போது தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது திருகோணமலை மாவட்ட பெண்கள், சர்வதேச மகளிர் தினத்தில் பெண்கள் சார்பாக அரசுக்கு முன்வைக்கப்படும் கோரிக்கையைத் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி யிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரல, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி மற்றும் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி , மொறவெவ உதவி பிரதேச செயலாளர் சத்யபிரியா, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி, துறைசார் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மாதர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# குருதிக்கொடை நிகழ்வுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சனமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில், அமரர் சு.சதீஸ்கண்ணா குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் 2 ஆவது மாபெரும் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவால் குருதி சேகரிப்பு இடம் பெறும்.

தற்பொழுது குருதி வங்கிகளில் காணப்படும் குருதித் தாட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் உயிர் காக்கும் உன்னத பணியில் அனைவரையும் அணி திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# மத்தியில் சாதகமான ஆட்சி அமைந்தால் இன்னும் 10 மடங்கு சாதனை செய்ய முடியும்

## பொள்ளாச்சியில் முதல்வர் ஸ்டாலின் உறுதி



மத்தியில் நமக்கு சாதகமான ஆட்சி அமைந்தால், தமிழகத்தில் இன்னும் 10 மடங்கு கூடுதலாக சாதனைகளை செய்ய முடியும் என பொள்ளாச்சியில் நடந்த அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆச்சிபட்டியில், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

இதில், முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு, 57,325 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“3 ஆண்டு கால திராவிட மாதிரி ஆட்சி சாதனைகளாக கலைஞர் மகளிர் உரிமை திட்டம், மகளிருக்கு விடியல் பயணம், புதுமைப்பெண், பள்ளிகளில் காலை உணவு, இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, மக்களுடன் முதல்வன், நீங்கள் நலமா? ஆகிய திட்டங்கள் உள்ளன.

கடைக்கோடி மக்களிடமும் பேசும் முதல்வர் நான். உங்கள் பிரச்சினைகளை காது கொடுத்துக் கேட்பவன். அதனால்தான் ‘நீங்கள் நலமா?’ திட்டத்தைக் கொண்டு வந்துள்ளேன். மக்களுக்காக சிந்தித்து திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டின் தொழில்வளம், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் வளருகிறது. இதனால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேறுகிறது.

இவற்றைப் பார்த்து பொறாமைப்பட்டு சிலர் பொய்களையும், அவதூறுகளையும் பரப்புகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் தக்க பாடம் புகட்டும் நேரம் வந்து விட்டது. நம் தமிழை, தமிழ்நாட்டை, நமது பெருமையை பழிப்பவர்களுக்கு பதில் சொல்லும் காலம் வந்துவிட்டது.

மக்களை மறுபடியும் ஏமாற்ற, பிரிந்தது போல நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழர் நலனுக்கு எதிரான அ.தி.மு.க. - பா.ஜ.க. என்ற கள்ள கூட்டணிக்கு எதிராக, தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க ஜனநாயக சக்திகள் திமுக கூட்டணியில் ஒற்றுமையாக நிற்கிறோம். நமக்கு உதவி செய்யும் மத்திய ஆட்சி அமைந்தால் இன்னும்10 மடங்கு கூடுதலாக சாதனைகளைச் செய்ய முடியும்.” - என்றார்.

## போதைப்பொருள் விவகாரம்:

# இ.பி.எஸ், அண்ணாமலைக்கு எதிராக முதல்வர் ஸ்டாலின் அவதூறு வழக்கு

போதைப்பொருள்கள் கடத்தல் விவகாரத்தில் தன்னைப்பற்றி அவதூறு கருத்து தெரிவித்தனர் என கூறி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆகியோருக்கு எதிராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில், சென்னை மாநகர குற்றவியல் வழக்கறிஞர் தேவராஜன், எடப்பாடி பழனிசாமி மற்றும் அண்ணாமலைக்கு எதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், போதைப்பொருள்கள் கடத்தல் விவகாரத்தில், ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டது தொடர்பாக கடந்த மார்ச் 8 ஆம் திகதி செய்தியாளர்களைச் சந்தித்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக முதல்வரான என்னை தொடர்புபடுத்தி பேசியிருந்தார். இதே விவகாரம் குறித்து எக்ஸ் தளத்தில் வீடியோ வெளியிட்டிருந்த பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையும் இந்த விவகாரத்தில் என்னை தொடர்புபடுத்தி பேசியிருந்தார்.





தமிழகத்தில் போதைப்பொருட்களை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், பேசிய எடப்பாடி பழனிசாமி மற்றும் அண்ணாமலை ஆகியோர் மீது கிரிமினல் அவதூறு வழக்கு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு; ஹரியாணா முதல்வர் சைனி அரசு வெற்றி



ஹரியாணா சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் நயாப் சிங் சைனி அரசு வெற்றி பெற்றது.

ஹரியாணாவில் பா.ஜ.க. – ஜன நாயக ஜனதா கட்சி (ஜே.ஜே.பி) கூட்டணி ஆட்சியில் இருந்தது. முதல்வராக பா.ஜ.கவின் மனோகர் லால் கட்டார் பதவி வகித்தார். மக்களவைத் தேர்தல் தொகுதிப் பங்கீட்டில் அதிருப்தி அடைந்த ஜே.ஜே.பி. கட்சி தலைவரும் துணை முதல்வருமான துஷ்யந்த் சவுதாலா கூட்டணி அரசுக்கு அளித்த ஆதரவை மீளப் பெற்றார். இதையடுத்து, முதல்வர் கட்டார், துஷ்யந்த் மற்றும் அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர்.

பா.ஜ.க. மேலிடப் பொறுப்பாளர்கள் உடனடியாக பா.ஜ.க. எம்எல்ஏ.க்கள் கூட்டம் நடத்தினர். அப்போது புதிய முதல்வராக ஓ.பி.சி. வகுப்பைச் சேர்ந்த நயாப் சிங் சைனி முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு ஆளுநர் பண்டாரு தத்தாத்ரேயா நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஹரியாணாவில் மொத்தம் உள்ள 90 இடங்களில் பா.ஜ.க.வுக்கு 41 இடங்கள் உள்ளன. பெரும்பான்மைக்கு 46 இடங்கள் தேவை. ஜே.ஜே.பி. கட்சி ஆதரவை மீளப் பெற்றாலும், பா.ஜ.க.வுக்கு சுயேச்சைகள் ஆதரவளிப்பதாக உறுதி அளித்தனர். இந்நிலையில் ஹரியாணா சட்டப்பேரவையில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது.

ஹரியாணா லோகித்கட்சியின் ஒரே ஒரு எம்.எல்.ஏ. கோபால் கண்டா மற்றும் 6 சுயேச்சைகள் ஆதரவுடன் முதல்வர் நயாப் சிங் அரசு வெற்றி பெற்றது. தற்போது ஹரியாணாவில் பா.ஜ.க.வின் பலம் 48 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் மருத்துவமனையில் அனுமதி

முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் காய்ச்சல் மற்றும் நெஞ்சுவலியால் அவதிப்பட்டுள்ளார். இதையடுத்து, புனேவில் உள்ள பாரதி மருத்துவமனையில் நேற்றிரவு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.



பிரதிபா பாட்டீலின் உடல்நிலை நன்றாக இருப்பதாகவும், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1934 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி பிறந்த பிரதிபா பாட்டீலுக்கு தற்போது 89 வயதாகிறது. கடந்த 2007 முதல் 2012 வரை இந்தியாவின் 12 ஆவது குடியரசுத் தலைவராக பிரதிபா பாட்டீல் பதவி வகித்துள்ளார்.

இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் என்பது குறிப்பிடத்தக்கது.

# இறுதிக் கட்டத்தில் பா.ஜ.க. கூட்டணியின் தொகுதி பங்கீடு: ஓரிரு நாள்களில் அறிவிப்பு



பா.ஜ,க, கூட்டணியில் த,மா,கா, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதி கட்சி, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், ஓ,பி,எஸ், அணி, அ,ம,மு,க, ஆகிய கட்சிகள் இணைந்துள்ளன.

இந்த நிலையில், பாமக, தேமுதிகவுடனும் பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

இதற்காக, மத்திய அமைச்சர்கள் வி.கே.சிங், கிஷன் ரெட்டி ஆகியோர் சென்னைக்கு வந்தனர். பா.ம.க, தே.மு.தி.கவையும் கூட்டணியில் இணைக்க பா.ஜ.க. தீவிரம் காட்டி வருகிறது.

அந்த வகையில், கூட்டணி, தொகுதி பங்கீடு தற்போது இறுதி கட்டத்தை எட்டியிருக்கிறது. இன்னும் ஓரிரு நாளில் கூட்டணி, தொகுதி பங்கீடுகளை இறுதி செய்து அறிவிப்புகளை பா.ஜ.க. வெளியிட இருக்கிறது.



# மோடிதான் மீண்டும் பிரதமர் அமெரிக்க எம்.பி. நம்பிக்கை

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் தேர்வு செய்யப்படுவார் என்று அமெரிக்காவைச் சேர்ந்த அரசியல்வாதியும், மக்கள் பிரதிநிதிகள் அவையின் உறுப்பினருமான ரிச்சர்ட் டீன் மெக்கார்மிக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியா மாகாணத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகள் அவைக்கு எம்.பி.யாக கடந்த 2023 இல் தேர்வு செய்யப்பட்டவர் ரிச்சர்ட் மெக்கார்மிக். குடியரசுக் கட்சியின் மூத்த தலைவராகவும் இருக்கிறார்.

இந்த நிலையில் இந்தியாவின் பிரதமராக மோடி மீண்டும் தேர்வு செய்யப்படுவார் என்று நேற்று ரிச்சர்ட் மெக்கார்மிக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தேர்வு செய்யப்படுவார் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். இதற்கு அவரது பரவலான புகழ் மற்றும் முற்போக்கான தலைமையே காரணம். அவரது கொள்கைகளும், தொலைநோக்குத் திட்டங்களும் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன.

நம்ப முடியாத அளவுக்கு அவர் மிகவும் பிரபலமாக இருக்கிறார். ஒரு முறை அவர் அமெரிக்கா வந்தபோது பிரதமர் மோடியுடன் நான் மதிய உணவு அருந்தினேன். கட்சி எல்லைகளுக்கு அப்பாற்பட்டவராக அவர் இருக்கிறார். அவர்தான் இந்தியாவின் பிரதமராக மீண்டும் வரப் போகிறார்.

அவரது தலைமையின் கீழ் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அபாரமாக உள்ளது. ஆண்டுதோறும் 4 முதல் 8 சதவீதம் வரை பொருளாதார வளர்ச்சி இருக்கிறது.” - என்றார்.

# உணவு விநியோக மையம் மீது தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்





ராஃபாவின் தெற்கு பகுதியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விநியோக மையத்தை இஸ்ரேல் தாக்கியதில் 5 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த தாக்குதலில் 22 பேர் வரை காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ராஃபாவின் தெற்கு பகுதியில் தற்போது நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் தற்போது வரை காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் 31 ஆயிரத்து 272 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், 73 ஆயிரத்து 24 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அவுஸ்ரேலியாவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்து பாரிய விபத்து




**26 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர்**

அவுஸ்ரேலியாவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்து சில மணி நேரங்களுக்குப் பிறகு சுமார் 26 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்வமானது, அவுஸ்ரெலியாவின் விக்டோரியா மாநிலத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அதன்போது, 27 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். அதில் ஒருவரின் நிலை மாத்திரம் கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மவுண்ட் கிளியர் விளிம்பில் அமைந்துள்ள சுரங்கத்தில் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விக்டோரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கனடா முரசு

பக்கங்கள் - 4

வியாழக்கிழமை 14/03/2024

## சிறுவன் மீது பாலியல் தொந்தரவு; 40 வருடங்கள் கழித்து 2 பேர் கைது

ஒன்ராரியோ, மார்ச் 14

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற பாலியல் தொந்தரவு சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

C2



# விருப்பமற்ற முடிவுகளையும் கூட நாட்டு நலனுக்காக எடுக்கிறோம்

## காபன் வரி அதிகரிப்புத் தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

ஒன்ராரியோ, மார்ச் 14

**மக்களினதும், நாட்டினதும் நலனுக்காக சில சந்தர்ப்பங்களில் பிரபல்யமற்ற முடிவுகளை எடுக்க நேரிடுவதாக கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நுகர்வோர் காபன் வரியானது அதிகரிக்கப்படவுள்ள நிலையில், அது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போதே ட்ரூடோ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.**

**காலநிலை மாற்றம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

கனடாவுக்கும், கனடாவில் அடுத்து வரப்போகின்ற தலைமுறையினருக்கும் நல்ல விடயங்களைச் செய்வதே தமது பிரதான கடமை என அவர் தெரிவித்துள்ளார்.

அல்பேர்ட்டா முதல்வருடனான சந்திப்பின் பின்னர் கல்கரியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, பிரதமர் ட்ரூடோ இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

அல்பேர்ட்டாவின் முதல்வர் உள்ளடங்கலாக, ஏனைய ஆறு முதல்வர்கள் 23 சதவீத நுகர்வோர் காபன் வரி அதிகரிப்பை நீக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த காபன் வரி அதிகரிப்பை தடுப்பதற்கு, அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் தெரிவித்துள்ளார்.

### பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட

## பலஸ்தீனத்தில் பெண்களுக்கு நிதியளிக்கும் கனடாவின் முடிவினால் இஸ்ரேல் அதிருப்தி

ஒன்ராரியோ,மார்ச்14

பலஸ்தீனத்தில் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிதியளிக்கும் கனடாவின் முடிவினால் இஸ்ரேல் அதிருப்தி அடைந்துள்ளது.

பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்ட பலஸ்தீனப் பெண்களுக்கான 1 மில்லியன் டொலர்களை ஒதுக்குவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி மார்ச் 12ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

C2





# தள்ளுபடியை நீக்கும் தீர்மானத்தினால் இலத்திரனியல் கார்களின் மவுசு வீழும்

## வாகன விற்பனையாளர்கள் கருத்து

கியூபெக்,மாரச்14

இலத்திரனியல் கார்களுக்கான தள்ளுபடியை நீக்கும் கியூபெக் அரசாங்கத்தின் தீர்மானம், தூய்மையான கார்களை வாங்கும் மக்களின் ஆர்வத்தைக் குறைக்கும் என வாகன விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வழங்கப்படும் 7,000 டொலர்கள் தள்ளுபடி இல்லையென்றால், இலத்திரனியல் கார்களை கொள்வனவு செய்யமாட்டார்கள் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.



கியூபெக் அரசாங்கத்தின் அண்மைய வரவு – செலவுத் திட்டத்தில், இதுவரை காலமும் இலத்திரனியல் வாகனங்களுக்கு அளித்து வந்த தள்ளுபடியை நீக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹைபிரிட் வாகனங்களுக்கு அடுத்த நிதியாண்டில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளதாக புதிய வரவு – செலவுத் திட்டத்தை சமர்பித்த கியூபெக் நிதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

### பலஸ்தீனத்தில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலஸ்தீனியப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கப்படல் வேண்டும் என அமைச்சர் ஜொலி குறிப்பிட்டிருந்தார்.

சமூக ஊடகத்தில் வெளியான இந்தப் பதிவிற்கு, கனடாவுக்கான இஸ்ரேலியத் தூதுவர் விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

வாழ்க்கை மற்றும் விடுதலைக்கான அடிப்படைக் கோட்பாடுகளை பேணும் மற்றும் பாதுகாக்கும் கனடாவின் உறுதிப்பாட்டை கீழ்மைப்படுத்துவதாக இந்த நிதியுதவி இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சிறுவன் மீது...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1983ஆம் ஆண்டு 12 வயதான சிறுவர் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொண்டனர் எனக் குற்றம்சுமத்தப்பட்டு, டொரன்டோவைச் சேர்ந்த 64 வயதான மற்றும் 59 வயதான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனச்நேற்று மார்ச் 13ஆம் திகதி பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களில் ஒருவர் 1983ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட சிறுவருடன் நண்பராக பழகி, அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் பாலியல் ரீதியாக பலாத்காரத்திற்கு உள்ளாக்கினார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு சந்தர்ப்பத்தில் குறித்த இரு சந்தேகநபர்களும் பாதிக்கப்பட்ட சிறுவர் மீது பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளனர்.



சந்தேகநபர்களின் தற்போதைய படங்களையும், சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியின் படங்களையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

# புதுப்பித்தல் சக்தி துறையினால் விவசாயம், சுற்றுச்சூழல் பாதிப்பு



அல்பேர்ட்டா, மார்ச் 14

அல்பேர்ட்டா மாநிலத்தின் வளரும் புதுப்பித்தல் சக்தி தொழில்துறை யானது விவசாயத்திற்கும், சுற்றுச்சூழ லுக்கும் சிறு பாதிப்பை ஏற்படுத்து வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டாவின் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதுப்பித்தல் சக்திக்கான நிலப் பயன்பாடு அல்பேர்ட்டாவின் விவசாய நிலத்தின் இழப்புக்கு காரணமாகும் எனவும், 2041ஆம் ஆண்டளவில் இது 1 சதவீதத்திற்கும் குறைவானதாகவே இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

சூரிய சக்தி மற்றும் காற்றலை மின் னுற்பத்தி என்பனவும் சுற்றுச்சூழ லில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கனடாவின் பரோல் சபையில் இடம் தாருங்கள்! சசகெச்சுவான் பூர்வீகக் குடிகள் கோருகின்றனர்

சசகெச்சுவான், மார்ச் 14

கனடா நன்னடத்தை சேவைகள் மற்றும் கனடாவின் பரோல் சபையில் தமது பிரதிநிதி ஒருவருக்கும் இடம் வேண்டும் என சசகெச்சுவான் பூர்வீகக் குடிகளின் தலைவர் கோரிக்கை விடுத் துள்ளார்.

பூர்வீகக் குடிகளைச் சேர்ந்தவர்கள் தவறிழைக்கும் போது, அவர்கள் சார்ந்த தீர்மானம் எடுத்தலில் பூர்வீகக் குடிக ளின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படாமை, இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத் தில் நிகழாது தடுப்பதற்கு உதவியாக அமையாது என அவர் குறிப்பிட்டுள் ளார்.

விசாரணைகள் மற்றும் பரிந்து ரைகளில் தமது கருத்துக்கள் உள் வாங்கப்பட்டமை பற்றிய விடயத்தில் தாம் அதிருப்தியடைந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் மத்திய அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுத்து இதற் கான வழியைக் கண்டறியவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

2022ஆம் ஆண்டில் ஜேம்ஸ் ஸ்மித் கிரி நேஷன் பகுதியில் சுமார் 11 பேரைக் கொன்றமை மற்றும் 17 பேரைக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, காவலில் இருந்த பூர்வீகக் குடியைச் சேர்ந்த சந்தேகநபர் அண்மையில் பொலிஸ் காவலில் உயி ரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த சசகெச்சுவான் பூர்வீகக் குடிகளின் தலைவர், தமது கருத்துக் களை பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங் காதபோது, எவ்வாறு நமக்கான நலன் கள் குறித்து அவர்களால் கொள்கை களை வகுக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# மத்திய அரச ஒப்பந்தங்களில் முறைகேடு இரண்டு அரச ஊழியர்கள் பதவி நீக்கம்!

ஒன்ராரியோ,மார்ச்14

மத்திய அரசாங்கங்களின் ஒப்பந்தங்களில் முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு அரச ஊழியர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய அரசாங்கத்தின் ஒப்பந்தங்களின் ஊடாக பணம் பெற்றனர் என்பதற்காகவும், அதனைத் தமது முகாமையாளர்களுக்குத் தெரிவிக்காதிருந்தனர் என்பதற்காகவும் இரண்டு அரச ஊழியர்கள் கணக்காய்வாளர் திணைக்களத்தினால் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மூன்றாவது நபர் தொடர்பில் கணக்காய்வாளர் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

முறைகேடு நடைபெற்ற ஒப்பந்தங்கள் குறித்து கணக்காய்வாளர் திணைக்களம் எவ்வித விவரங்களையும் வெளியிடவில்லை.

இந்தச் சம்பவத்தையடுத்து, மத்திய அரசாங்கத்தின் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஊழல் இடம்பெறாது தடுப்பதற்கான புதிய வழிகள் குறித்து சிந்திக்க வேண்டிய தேவையுள்ளதாக பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.



# மத்திய அரசின் ஆகக் குறைந்த சம்பளத்தை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பதற்கு முடிவு

ஒன்ராரியோ, மார்ச் 14

மத்திய அரசாங்கத்தின் ஆகக் குறைந்த சம்பளமானது அடுத்த மாதம் முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், மத்திய அரசாங்கம் அதன் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை 65 சதங்கள் அல்லது ஒரு மணி நேரத்திற்கு சுமார் 17.30 டொலர்கள் என ஏப்ரல் 1 முதல் உயர்த்துவதாக அறிவித்தது.

பணவீக்கத்துக்கு இணையாக ஆண்டுதோறும் சம்பளம் அதிகரிக்கப்படும் என்கிற மத்திய அரசாங்கத்தின் வாக்குறுதியின் ஒரு பகுதியாக இந்த உயர்வு உள்ளது.

இந்த மாற்றம் சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து, தொலைத்தொடர்பு, வங்கி மற்றும் தபால் சேவைகள் போன்ற மத்திய அரசின்- ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு பயனளிக்கவுள்ளது.



# அரசின் மது விற்பனை நிலையம் தனியார்மயமாக்கப்படமாட்டாது

## ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோட் தெரிவிப்பு

ஒன்ராரியோ,மார்ச்14

அரச மது விற்பனை நிலையமான எல்.சி.பி.ஓவினை ஒருபோதும் தனியார்மயப்படுத்தப் போவதில்லை என ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோட் தெரிவித்துள்ளார்.

எல்.சி.பி.ஓவினை ஒன்ராரியோ அரசாங்கம் தனியார்மயப்படுத்தப் போவதாக தெரிவித்து, அதன் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எல்.சி.பி.ஓவின் ஊழியர்கள் பொய் கூறுகின்றனர் எனவும், ஒன்ராரியோ அரசாங்கம் ஒருபோதும் எல்.சி.பி.ஓவை தனியார் மயப்படுத்தாது எனவும் டக் ஃபோட் கூறியுள்ளார்.

தொழிற்சங்கத் தலைவர்கள் ஊழியர்களை தவறாக வழிநடத்துகின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.